# 'நீட்' தேர்வில் தமிழகத்தில் முதலிடம் பெற்ற திருவள்ளூர் மாணவி சுருதி

## தேர்ச்சி சதவீதம்: கடந்த ஆண்டை விட தமிழகம் முன்னேற்றம்

**சென்னை, ஜூன் 6–**

**'நீட்' தேர்வில் 56.50 சதவீதம் பேர் தேர்ச்சி பெற்று இருக்கின்றனர். திருவள்ளூர் மாணவி சுருதி தமிழகத்தில் முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளார்.**

நாடு முழுவதும் எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ். படிப்புகளில் சேருவதற்கு தேசிய தகுதி நுழைவுத்தேர்வு (நீட்) நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு தேசிய தேர்வு முகமை (என்.டி.ஏ.) நீட் தேர்வை 14 லட்சத்து 10 ஆயிரத்து 755 பேர் (92.85 சதவீதம்) தேர்வு எழுதினார்கள். தமிழகத்தில் இருந்து மட்டும் 1 லட்சத்து 23 ஆயிரத்து 78 பேர் தேர்வு எழுதினார்கள். அவர்களில் 59 ஆயிரத்து 785 பேர் தேர்ச்சி பெற்று இருக்கின்றனர். தேர்ச்சி சதவீதம் 48.57 ஆகும். கடந்த ஆண்டில் தேர்ச்சி சதவீதம் 39.56 ஆகும். இதனோடு ஒப்பிட்டு பார்க்கும்போது, கடந்த ஆண்டை விட 9.01 சதவீதம் அதிகமானோர் தேர்ச்சி பெற்று இருக்கின்றனர்.

இந்த நிலையில் நீட் தேர்வு முடிவு நேற்று வெளியிடப்பட்டது. www.nta.ac.in, www.ntaneet.nic.in என்ற இணையதளத்தில் தேர்வு முடிவுகள் வெளியானது. தேர்வர்கள் தங்களுடைய பதிவு எண், பிறந்த தேதி மற்றும் பாதுகாப்பு பின்கோடு ஆகியவற்றை பதிவு செய்து நீட் தேர்வு மதிப்பெண்களை தெரிந்து கொண்டனர்.

நீட் தேர்வு முடிவுகளின் அடிப்படையில், 14 லட்சத்து 10 ஆயிரத்து 755 பேர் தேர்வு எழுதியதில், 7 லட்சத்து 97 ஆயிரத்து 42 பேர் தகுதி பெற்று இருக்கின்றனர். மாணவர்களை விட மாணவிகளே அதிகம் பேர் தேர்ச்சி பெற்று இருக்கின்றனர்.

நாடு முழுவதும் 56.50 சதவீதம் பேர் தேர்ச்சி பெற்று இருக்கின்றனர். பொதுப்பிரிவினரில் 2 லட்சத்து 86 ஆயிரத்து 245 பேரும், இதர பிற்படுத்தப்பட்டோர் பிரிவில் 3 லட்சத்து 75 ஆயிரத்து 635 பேரும், எஸ்.சி. பிரிவினரில் 99 ஆயிரத்து 890 பேரும், எஸ்.டி. பிரிவில் 35 ஆயிரத்து 272 பேரும் நீட் தேர்வில் தகுதி பெற்று இருக்கின்றனர்.

### இந்தியாவில் முதலிடம் ராஜஸ்தான் மாநிலம்

பொதுப்பிரிவினருக்கு 134 மதிப்பெண்களும், இதர பிற்படுத்தப்பட்டோர், எஸ்.சி. மற்றும் எஸ்.டி. பிரிவினருக்கு 107 மதிப்பெண்களும் தகுதி மதிப்பெண்கள் ஆகும். இந்தியாவில் நீட் தேர்வில் ராஜஸ்தான் மாநிலத்தை சேர்ந்த நலின் கந்தேல்வால் என்ற மாணவர் 720க்கு 701 மதிப்பெண் பெற்று முதல் இடத்தை பிடித்து இருக்கிறார். டெல்லியை சேர்ந்த பவிக் பன்சல் என்ற மாணவர் 700 மதிப்பெண் பெற்று 2ம் இடத்தையும், உத்தரபிரதேசம் மாநிலத்தை சேர்ந்த அக்ஷத் கவுசிக் என்ற மாணவர் 700 மதிப்பெண் பெற்று 3ம் இடத்தையும் பெற்று இருக்கின்றனர்.

### திருவள்ளூர் மாணவி முதலிடம் பிடித்தது எப்படி?

நீட் தேர்வில் தமிழகத்தில் மாணவி கே.சுருதி 720க்கு 685 மதிப்பெண் பெற்று முதல் இடம் பிடித்து இருக்கிறார். இவர் அகில இந்திய அளவில் 57வது இடத்தை பெற்று இருக்கிறார். மேலும், பெண்கள் பட்டியலில் முதல் 20 பேரில் 10வது இடத்தை அவர் பெற்று உள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியை அடுத்த பஞ்செட்டி கிராமத்தில் உள்ள வேலம்மாள் பள்ளியை சேர்ந்த மாணவி சுருதி. மணவாள நகர் பகுதியை சேர்ந்தவர். சுருதியின் தந்தை கோவிந்தராஜ் மற்றும் தாய் கோமதி ஆகியோர் டாக்டர்களாக உள்ளனர்.

இதுகுறித்து மாணவி சுருதி நிருபர்களிடம் கூறியதாவது:

'நீட்' தேர்வு எளிதாக இருந்ததால் மாநிலத்தில் முதல் மாணவியாக தேர்ச்சி பெற முடிந்தது. 10, 11, 12 ம் வகுப்பு பாடங்களை திரும்ப திரும்ப படித்ததால் அதிக மதிப்பெண் எடுக்க முடிந்தது. மேலும் விடுமுறை நாட்களில் வீட்டுக்கு சென்று படித்ததால் 'நீட்' தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெற முடிந்தது. எனக்கு ஆசிரியர்களும், பெற்றோரும் முழு ஒத்துழைப்பு கொடுத்தனர் என்று கூறினார்.

மருத்துவ படிப்புக்கான இடங்களில் அரசு கல்லூரிகளில், அகில இந்திய ஒதுக்கீட்டுக்கு 15 சதவீதம் போக, மீதமுள்ள 85 சதவீதம் இடங்களுக்கும், சுயநிதி மருத்துவ கல்லூரிகளில் 65 சதவீதம் இடங்களுக்கும் அந்தந்த மாநிலங்களில் கலந்தாய்வு நடத்தப்படும்.



## மாற்றுத்திறனாளிகள் பிரிவில் கரூர் மாணவர் முதலிடம்

நீட் தேர்வில் மாற்றுத்திறனாளிகள் பிரிவில் தமிழக அளவில் முதல் இடத்தையும், அகில இந்திய அளவில் 5வது இடத்தையும் கரூர் மாணவர் கார்வண்ணபிரபு பெற்றுள்ளார். இந்த மாணவனின் தந்தை கண்ணன் டாக்டராக உள்ளார்.

நாமக்கல் கிரீன் பார்க் பள்ளியில் பிளஸ்2 படித்த இந்த மாணவன் 500 க்கு 476 மதிப்பெண் பெற்றிருந்தார். தற்போது நீட் தேர்வில் அகில இந்திய அளவில் சாதனை படைத்துள்ளார். இந்த சாதனை குறித்து மாணவர் கார்வண்ண பிரபுவிடம் கேட்டபோது, ''நீட் தேர்வுக்காக பள்ளியின் சிறப்பு பயிற்சி வகுப்பில் சேர்ந்து படித்தேன். பள்ளி வகுப்பு முடிந்து தினமும் 4 மணி நேரம் இதற்காக செலவிட்டேன். கடந்த 2 வருடங்களாக நீட் பயிற்சி எடுத்தேன். அகில இந்திய அளவில் 700க்கு 572 மதிப்பெண் பெற்றுள்ளேன். இது மகிழ்ச்சி அளிக்கிறது. தந்தையை போன்று டாக்டராகி மக்களுக்கு சேவை செய்வேன்'' என்று கூறினார்.

## தொழிலதிபருக்கு கத்திக் குத்து: 4 பேர் கைது

சென்னை, ஜூன். 6–

சென்னை திருவல்லிக்கேணியில் தொழிலதிபரை கத்தியால் குத்திய 4 பேரை போலீசார் கைது செய்தனர்.

சென்னை ராமாபுரம், பூத்தபேடு, அன்னை சத்யா நகரைச் சேர்ந்த தொழிலதிபர் ரமேஷ் (வயது 30). சென்னை திருவல்லிக்கேணி, மல்லன் பொன்னப்பன் முதலி தெருவில் தனியார் நிறுவனம் நடத்தி வருகிறார். இவரது நிறுவனத்தில் தவுலத் என்ற பெண் கடந்த 5 ஆண்டுகளாக வேலை செய்து வருகிறார். ரமேஷ் திருமணமாகி மனைவியை பிரிந்து வாழ்ந்து வருகிறார். இந்நிலையில் தவுலத் தனது மகளை ரமேஷுக்கு திருமணம் செய்து வைக்க முடிவு செய்துள்ளார். இதனைக் கேள்விப்பட்ட தவுலத்தின் உறவினர்கள் மதம் மாறி திருமணம் செய்து வைப்பதை கண்டித்து தவுலத்திடம் தகராறில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் ஏற்பட்ட முன்விரோதத்தில் தவுலத்தின் உறவினர்கள் அதே பகுதியைச் சேர்ந்த இனாயத்துல்லா (36), ரபீக் (38), சையத் ரபீக் (32), மகபூப் பாஷா (32) ஆகிய 4 பேரும் ரமேஷை சரமாரியாக தாக்கி கத்தியால் குத்தினர். இதில் கை, தோள்பட்டையில் காயம் ஏற்பட்ட ரமேஷ் ராயப்பேட்டை அரசு ஆஸ்பத்திரியில் அனுமதியாகி சிகிச்சை பெற்றார். தகவல் கிடைத்ததும் ஜாம்பஜார் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர். இதனையடுத்து ரமேஷை கத்தியால் தாக்கிய ரபீக் உள்பட 4 பேரையும் கைது செய்தனர். நால்வரும் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டு சென்னை மத்திய புழல் சிறையில் அடைக்கப்பட்டனர்.

## வடமாநிலங்களில் இடி, மின்னலுடன் புழுதி புயல் வீச வாய்ப்பு

புதுடெல்லி,ஜூன்.6–

வடமாநிலங்களில் இடி, மின்னலுடன் புழுதி புயல் வீச வாய்ப்பு உள்ளது என இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கோடை காலம் தொடங்கி தொடர்ந்து வரும் நிலையில், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வெப்பநிலை உயர்ந்து வருகிறது. சில இடங்களில் மழை பெய்தும் வெப்பம் தணியவில்லை. மத்திய பிரதேசத்தின் நவ்காங் பகுதியில் நேற்று உயர்ந்தபட்ச வெப்பநிலை 47.9 டிகிரி செல்சியஸ் ஆக பதிவாகி உள்ளது.

ராஜஸ்தான், மத்திய பிரதேசம் உள்ளிட்ட இந்தியாவின் வடமாநிலங்களில் கடுமையான அனல் காற்று வீசும் நிலை ஏற்பட்டு உள்ளது என இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதேபோன்று அரியானா, சண்டிகார் மற்றும் டெல்லி, பஞ்சாப் மற்றும் மேற்கு உத்தர பிரதேசத்தின் சில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய மழை மற்றும் புழுதி புயலுடன் மணிக்கு 30 முதல் 40 கி.மீட்டர் வேகத்தில் காற்று வீச கூடும் என்றும் எச்சரித்து உள்ளது.

## மருத்துவ படிப்புக்கான ஆன்லைன் விண்ணப்பம்: நாளை முதல் பதிவிறக்கம் செய்யலாம்

### அமைச்சர் விஜயபாஸ்கர் அறிவிப்பு

சென்னை, ஜூன்.6

நீட் தேர்வு முடிவு நேற்று வெளியாகி உள்ள நிலையில் மருத்துவ படிப்புக்கான ஆன்லைன் விண்ணப்பம் நாளை முதல் பதிவிறக்கம் செய்யலாம் என்று சுகாதாரத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் விஜயபாஸ்கர் கூறுகையில்,

தமிழகத்தில் 350 மருத்துவ படிப்புக்கான இடங்களை இந்த ஆண்டு அதிகரித்து இருக்கிறோம். மேலும் 508 எம்.டி., எம்.எஸ். இடங்கள் அதிகரிக்கப்பட்டு இருக்கிறது. எந்த மாநிலத்திலும் ஒரு ஆண்டில் இவ்வளவு அதிகரிப்பு இல்லை. நோயாளிகள் மற்றும் உள்நோயாளிகளின் எண்ணிக்கை, உள்கட்டமைப்பு வசதி அடிப்படையில் மருத்துவ கவுன்சில் மருத்துவ படிப்புக்கான இடங்களுக்கு ஒப்புதல் அளிக்கிறது.

தேர்வு நேரத்தில் மன அழுத்தம் யாருக்கும் ஏற்பட்டு விடக் கூடாது. அதை போக்குவதற்காக 104 சேவை நடைமுறையில் இருக்கிறது. எந்த தேர்வாக இருந்தாலும், பொதுவாக தன்னம்பிக்கையோடு மாணவ–மாணவிகள் இருக்க வேண்டும். நீட் தேர்வில் குறைந்த மதிப்பெண் பெற்றதால் 2 பேர் தற்கொலை செய்து கொண்டதாக தகவல்கள் வருகின்றன. இது மிகுந்த வேதனையை ஏற்படுத்துகிறது.

நீட் தேர்வு முடிவு வெளியாகி உள்ள நிலையில், ஆன்லைன் விண்ணப்பங்களை இணையதளத்தில் பதிவு செய்ய இருக்கிறோம். அதற்கான பணிகள் நடந்து வருகிறது. 7ந் தேதி (நாளை) முதல் மாணவ–மாணவிகள் எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ். போன்ற மருத்துவ படிப்புகளுக்கு விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பின்னர், அந்த விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.



## லாரி டிரைவரின் செல்போனை திருடிக் கொண்டு ஓடிய திருடனை விரட்டிப் பிடித்த காவலர்கள்: கமிஷனர் ராஜேந்திரன் பரிசு வழங்கி பாராட்டு

**சென்னை, ஜூன் 6–**

**தூங்கிக்கொண்டிருந்த லாரி டிரைவரின் செல்போனை திருடி கொண்டு தப்பி ஓடிய குற்றவாளியை விரட்டிச்சென்று பிடித்த காவலர்களை கமிஷனர் ஏ.கே. விசுவநாதன் நேரில் அழைத்து பாராட்டினார்.**

திருவாரூர் மாவட்டம், கொட்டார்க்குடி தாலுகா, மேல தெருவைச் சேர்ந்த லாரி டிரைவர் மருதய்யன் (47) எண்ணூர் விரைவு சாலை, பலகைதொட்டி குப்பம் அருகில் லாரியை நிறுத்திவிட்டு தூங்கிக் கொண்டிருந்தார். நள்ளிரவு 2.45 மணிக்கு மருத நபர் ஒருவர் சட்டைப்பையில் இருந்த செல்போனை திருடிக் கொண்டு தப்ப முயன்றது தெரியவந்தது. உடனே அவனை பிடிக்க முயன்ற போது, இவரது சத்தம் கேட்டு அந்த பகுதியில் ரோந்து பணியிலிருந்த திருவொற்றியூர் தலைமைக் காவலர் ஆர்.சரவணன், மற்றும் இரண்டாம் நிலைக்காவலர் வி.யோகபூபதி ஆகிய இருவரும் விரைந்து செயல்பட்டு, செல்போன் பறித்துக்கொண்டு தப்பிய வாலிபரை மடக்கிப்பிடித்து கைது செய்து திருவொற்றியூர் காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

விசாரணையில் பிடிபட்ட நபர் பழைய வண்ணாரப்பேட்டைச் சேர்ந்த வசந்தகுமார் (வயது 25) என்பது தெரியவந்தது., அவரிடமிருந்த செல்போன் பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணைக்குப் பின்னர் வசந்தகுமார் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

பணியின்போது விழிப்புடன் செயல்பட்டு, செல்போன் பறிப்பு குற்றவாளியை விரட்டி பிடித்து கைது செய்த தலைமைக்காவலர் ஆர். சரவணன், இரண்டாம் நிலைக்காவலர் வி.யோகபூபதி ஆகிய இருவரையும் சென்னை பெருநகர காவல் துறை கமிஷனர் ஏ.கே.விசுவநாதன் நேரில் அழைத்து பாராட்டி வெகுமதி வழங்கினார்.

## கடற்படையில் பாகுபாடு கூடாது: புதிய தலைமை தளபதி உத்தரவு

**புதுடெல்லி,ஜூன்.6–**

**கடற்படையின் புதிய தலைமை தளபதியாக பொறுப்பேற்றுள்ள கரம்பிர் சிங், அதிகாரிகளுக்குள், வி.ஐ.பி., கலாசாரம், தேவையற்ற ஆடம்பரம், உணவு பரிமாறுவதில் பாகுபாடு போன்றவற்றை நீக்க உத்தரவிட்டுள்ளார்.**

இந்திய கடற்படையின், தலைமை தளபதியாக இருந்த சுனில் லன்பா, ஓய்வுபெற்றதை அடுத்து, கடந்த, 31ல், கடற்படையின், 24வது தலைமை தளபதியாக, கரம்பிர் சிங், பொறுப்பேற்று உள்ளார். கடற்படையின் அனைத்து பிரிவுகளுக்கும், அவர் அனுப்பியுள்ள கடிதத்தில், பல சீர்திருத்தங்களை பின்பற்ற அறிவுறுத்தியுள்ளார்.

அதன் விபரம்:–

ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் பின்பற்றப்பட்ட, நடைமுறைகளை தூக்கி எறியவேண்டும். கடற்படையின் அனைத்து பிரிவு அதிகாரிகளும் சமமாக நடத்தப்பட வேண்டும். அதிகாரிகளை வரவேற்க, வீரர்களும், குழந்தைகளும் வரிசையில் நிற்கும் மரபு மாற்றப்பட வேண்டும். அதிகாரிகளை வரவேற்கும் போது, பூங்கொத்து கொடுக்கக் கூடாது, சல்யூட் அடித்து,வரவேற்றால் போதும். ஒவ்வொரு முறையும், அதிகாரிகளை, அவர்களின், 'ரேங்க்' தொடர்பான பட்டங்களுடன் அழைக்கப்பட தேவையில்லை. கடித போக்குவரத்தின் போது மட்டும், அதிகாரிகளின் ரேங்க்கை குறிப்பிட்டால் போதும். கடற்படையின் உணவகங்களில் வழங்கப்படும் உணவு, பானங்கள் போன்றவை, அனைவருக்கும் சமமானதாக இருக்க வேண்டும்; உணவு பரிமாறுதலில், பாகுபாடு இருத்தல் கூடாது.சீனியர் அதிகாரிகளிடம், ஜூனியர் அதிகாரிகள் ஒழுக்கமாகவும், மரியாதையாகவும் இருக்க வேண்டும். அதற்காக, அடிமைகள் போல இருக்க வேண்டிய அவசியமில்லை.இந்த நடைமுறைகளை, உடனடியாக பின்பற்ற வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## பிரதமர் மோடியுடன் மத்தியபிரதேச முதல்வர் கமல்நாத் திடீர் சந்திப்பு

**புது டெல்லி,ஜூன்.6–**

டெல்லியில் காங்கிரஸ் கட்சியின் முக்கிய தலைவரும், மத்திய பிரதேசம் மாநிலத்தின் முதல்வருமான கமல்நாத் இன்று டெல்லியில் பிரதமர் மோடியை சந்தித்தார்.

இதற்கிடையில் நடந்து முடிந்த மக்களவை தேர்தலில் மத்தியபிரதேசம் மாநிலத்தில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற கமல்நாத் சரியாக செயல்படவில்லை என்று காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி குற்றம் சாட்டியிருந்தார். இதையடுத்து மக்களவை தேர்தலில் பணபரிவர்த்தனையில் ஈடுபட்டதாக கமல்நாத் மீது பா.ஜ.க.வினர் கடும் குற்றம் சாட்டியிருந்தனர். இந்த நிலையில், இன்று பிரதமர் மோடியை கமல்நாத் திடீரென சந்தித்துள்ளார்.


**படிவம் எண். INC-26**

(கம்பெனிகள் (இணைத்தல்) விதிகள் 2014, விதி 30ன்படி) கம்பெனியின் பதிவு அலுவலகத்தை ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு மாற்றுவது தொடர்பான விஷயமாக பத்திரிக்கை விளம்பரம். பிராந்திய இயக்குனர் முன்பாக, சென்னை. கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 13, துணைப்பிரிவு (4) மற்றும் கம்பெனிகள் (இணைத்தல்) விதிகள் 2014, விதி 30, துணை விதி (5) மற்றும் பிரிவு (a)ன் விஷயத்தில்

மற்றும்

லுலு ஹாஸ்பிடாலிட்டி லிமிடெட் (முன்னர் டோட்லா இன்டர்நேஷனல் லிமிடெட்), பதிவு அலுவலகம், ''ரெயின்போ கஸ்தூரி'', 3வது தளம் 3பி, எண். 4/54, 3வது மெயின் ரோடு, ஆர்.ஏ.புரம், சென்னை–600 028 தமிழ்நாடு. விண்ணப்பதாரர். 05 ஏப்ரல் 2019 அன்று நடைபெற்ற அசாதாரண பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சிறப்பு தீர்மானத்தின்படி, கம்பெனியின் பதிவு அலுவலகத்தை ''தமிழ்நாடு மாநிலத்திலிருந்து கேரள மாநிலத்து''க்கு மாற்றுவதற்காக கம்பெனியின் மெமோரண்டம் ஆப் அசோசியேஷனில் திருத்தம் செய்வதை உறுதி செய்ய கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 13ன்கீழ் பிராந்திய இயக்குனர், சென்னை அவர்களுக்கு விண்ணப்பம் ஒன்றை தாக்கல் செய்ய கம்பெனி திட்டமிட்டுள்ளது என்று பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. கம்பெனியின் பதிவு அலுவலகத்தை மாற்றும் திட்டத்தினால் எவரது நலமேனும் பாதிக்கப்படுவதாக கருதுவாராயின், பாதிக்கப்படும் நலன் மற்றும் எதிர்ப்பதற்கான காரணத்தை அபிடவிட்டுடன் இணைத்து எம்சிஏ–21 போர்டல் (www.mca.gov.in)க்கு முதலீட்டாளர் புகார் படிவத்தை அனுப்பலாம் அல்லது பிராந்திய இயக்குனர், 5வது தளம், சாஸ்திரி பவன், 26 ஹாடோஸ் சாலை, சென்னை–600 006 அவர்களுக்கு இந்த அறிவிப்பு வெளியான 14 நாட்களுக்குள் நேரடியாக அளிக்கலாம் அல்லது பதிவுத்தபால் மூலம் அனுப்பலாம். அதன் நகல் ஒன்றை மேற்குறிப்பிட்டுள்ள முகவரியில் உள்ள விண்ணப்பதாரர் கம்பெனியின் பதிவு அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும்.

விண்ணப்பதாரர் சார்பாக
ஒப்பம்
இயக்குனர்

தேதி: 06.06.2019
இடம்: சென்னை

**BEFORE THE HON'BLE DEBTS RECOVERY TRIBUNAL- II AT CHENNAI**
**DEVA TOWERS, 4th FLOOR, 770 ANNA SALAI, CHENNAI-600 002**
**O.A.No. 391 OF 2019**

BETWEEN

Punjab National Bank,
Represented by its Chief Manager,
K K Nagar Branch,
No.347, Dr A Lakshmanasamy Salai,
Chennai – 600 014 ...Petitioner/ Applicant

vs

V.Karthick, s/o P.Vellaichamy,
No. 60/68E, Kamarjar Salai,
R.A.Puram, Chennai-600 028. …Defendants

**NOTICE TO DEFENDANTS**

Please take notice that the above O.A was filed by the Applicant Bank for recovery of an amount of Rs. 40,46,985.00 with further interest and costs, from the defendants. Since notice could not be served in due course on the Defendants, the Hon'ble Tribunal was pleased to order publication of notice to the Defendants returnable by 10/07/2019.

You are therefore requested to be present on 10/07/2019 at 11.00 A.M. before the Hon'ble Tribunal for defending your case in person or through duly authorized counsel, failing which the case will be decided in your absence.

S.VAIDYANATHAN
COUNSEL FOR APPLICANT



**ஐடிஎப்சி பர்ஸ்ட் பேங்க் லிமிடெட்**
(முன்னர் ஐடிஎப்சி பேங்க் லிமிடெட்) CIN : L65110TN2014PLC097792
பதிவு அலுவலகம்: கேஆர்எம் டவர்ஸ், 8வது மாடி, ஹாரிங்டன் சாலை, சேத்துப்பட்டு,
சென்னை – 600 031. தொலைபேசி : +91 44 4564 4000 பேக்ஸ் : +91 44 4564 4022

IDFC FIRST Bank

**(கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(2)ன் கீழ் அறிவிப்பு)**

கீழ்க்கண்ட கடன்தாரர்கள் மற்றும் உடன் கடன்தாரர்கள் **ஐடிஎப்சி பர்ஸ்ட் பேங்க் லிமிடெட்டிலிருந்து (முன்னர் ஐடிஎப்சி பேங்க் லிமிடெட்)** கீழ்க்குறிப்பிட்டுள்ள ஈடுபெற்ற கடன்களை பெற்றிருந்தனர். கீழ்க்குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள் மற்றும் உடன் கடன்தாரர்கள் பெற்ற கடனுக்கு ஈடாக உரிய சொத்துக்கள் அடமானமாக பெறப்பட்டது. கடன் ஒப்பந்தங்களில் உள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளை கடைபிடிக்க மற்றும் ஒழுங்காக திரும்ப செலுத்த அவர்கள் தவறிவிட்டனர். ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியாவின் வழிகாட்டுதலின்படி அவர்களின் கடன்கள் என்பிஏ ஆக வகைப்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் **ஐடிஎப்சி பர்ஸ்ட் பேங்க் லிமிடெட்டிற்கு (முன்னர் ஐடிஎப்சி பேங்க் லிமிடெட்)** கீழ்க்கண்ட அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளபடி அனுப்பப்பட்டுள்ள அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள செலுத்த வேண்டிய பாக்கித் தொகை மற்றும் மேற்சொன்ன தொகையின் மீது அந்தந்த தேதிகளிலிருந்து ஒப்பந்தப்படியான மற்றும் பொருந்தக்கூடிய மேலும் வட்டி ஆகியவை கீழே அளிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | கடன் கணக்கு எண். | கடன் வகை | கடன்தாரர்கள் பெயர் | 13(2) அறிவிப்பு படி செலுத்த வேண்டிய தொகை | அறிவிப்பு தேதி | ஈடுபெற்ற ஆஸ்தி விவரங்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 13749047 | வீட்டு கடன் | 1. மபு ஹுசேன் 2. பிஸ்மில்லா மட்டன் அன்ட் சிக்கன் ஸ்டால் 3. பரிதா பானு | ரூ. 741463.58/– | 17.05.2019 | திருவள்ளூர் மாவட்டம் மற்றும் கும்மிடிப்பூண்டி தாலுக்கா, மதர்பாக்கம் கிராமம், எண்.14, சர்வே எண்.208/1, 208/2 மற்றும் 208/3, விஸ்தீரணம் 1500 சதுர அடி. மனை எண்.172, DTCP அங்கீகார எண்.07/2017, உத்தரவு எண். Na.Ka. No.1051/2016/Tvl.Regn2, 30.01.2017 தேதியிடப்பட்டது. சர்வே எண்.113/5, 208/1, 2, 3 4, 5ஏ, 5சி, 6, 209/1, 2, 3 4, 5, 6 மற்றும் 210/பி. DTCPஆல் அங்கீகரிக்கப்பட்ட காலி வீட்டு மனை மற்றும் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். அங்கீகரிக்கப்பட்ட லே அவுட் பெயர் 'நியூ சன் சிட்டி'. அதன் எல்லைகள் : வடக்கு : மனை எண்.146 மற்றும் 147; தெற்கு : 40 அடி அகல 2வது பிரதான சாலை, கிழக்கு : மனை எண்.173, மேற்கு : மனை எண்.171. விஸ்தீரணம் : கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கம் : 30 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கம்: 30 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கம் : 50 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கம் : 50 அடி. இந்த சொத்தானது கும்மிடிப்பூண்டி சார் பதிவு மாவட்டம் மற்றும் வட சென்னை பதிவு மாவட்ட எல்லைக்குட்பட்டது. |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாக்கித்தொகை மற்றும் அந்தந்த தேதிகளிலிருந்து ஒப்பந்தப்படியான விகிதத்தில் வட்டி மற்றும் இதர கட்டணங்களை இந்த அறிவிப்பு வெளியான 60 நாட்களுக்குள் **ஐடிஎப்சி பர்ஸ்ட் பேங்க் லிமிடெட்டிற்கு (முன்னர் ஐடிஎப்சி பேங்க் லிமிடெட்)** செலுத்துமாறு நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். அவ்வாறு செலுத்த தவறும்பட்சத்தில் **ஐடிஎப்சி பர்ஸ்ட் பேங்க் லிமிடெட்டிற்கு (முன்னர் ஐடிஎப்சி பேங்க் லிமிடெட்)** செலுத்த வேண்டிய தொகையை பெறுவதற்கு குறிப்பிடப்பட்டுள்ள அடமான சொத்துக்களின் மீது கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(4) மற்றும் பிரிவு 14ன் கீழ் நடவடிக்கைகளை கீழ்க்கையொப்பமிட்டவர் மேற்கொள்வார். மேற்சொன்ன சட்டப்பிரிவு 13(13)ன்படி மேற்சொன்ன ஈடுபெற்ற ஆஸ்திகளை விற்றல்/குத்தகைக்கு விடுதல் அல்லது இதர வகையில் ஈடுபட உங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது என்பதை அறியவும்.

**ஒப்பம்/–அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி**
**ஐடிஎப்சி பர்ஸ்ட் பேங்க் லிமிடெட்**
**முன்னர் ஐடிஎப்சி பேங்க் லிமிடெட்**

**தேதி: 06.06.2019**
**இடம்: திருவள்ளூர்**



**EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்**
The Oberoi Group உறுப்பினர்
பதிவு அலுவலகம்: 1/24, ஜி.எஸ்.டி ரோடு, மீனம்பாக்கம், சென்னை–600027.
Telephone: 91-44-2234 4747; Facsimile: 91-44-2234 6699, 2234 4985
முதலீட்டாளர்கள் சேவைகள் பிரிவு: 7 ஷாம் நாத் மார்க், டெல்லி-110054
Telephone: 91-11-2389 0505; Facsimile: 91-11-2389 0575 Website: www.eihassociatedhotels.in
Email: isdho@oberoigroup.com; invcom@tridenthotels.com CIN: L92490TN1983PLC009903

**கம்பெனியின் சமபங்குதாரர்களுக்கு அறிவிப்பு**

**பொருள்: கம்பெனியின் சாதாரண சமபங்குகளை முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி கணக்கிற்கு மாற்றுதல்**

கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 124 (6) மற்றும் அவ்வப்போது திருத்தப்பட்ட முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையம் (கணக்கு வைப்பு, தணிக்கை, பரிமாற்றம் மற்றும் திருப்பியளித்தல்) விதிகள் 2016 (ஐஇபிஎப் விதிகள்')–ன்படி, தொடர்ந்து ஏழு (7) ஆண்டுகள் அல்லது அதற்கு மேலாக டிவிடெண்ட் கோரப்படாத அல்லது செலுத்தப்படாத கம்பெனியின் சாதாரண பங்குகளை சட்டப்படி இந்திய அரசின் முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி (ஐஇபிஎப்) சஸ்பென்ஸ் கணக்கிற்கு மாற்ற வேண்டிய அவசியம் கம்பெனிக்கு உள்ளது என்று இதன் மூலம் உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

கம்பெனி பதிவேடுகளின்படி, 2011–12 நிதி ஆண்டு அதாவது 31 மார்ச், 2012ல் முடிந்த நிதி ஆண்டில் கோரப்படாத/செலுத்தப்படாத டிவிடெண்ட் 11 செப்டம்பர், 2019 அன்றோ அல்லது அதற்கு பின்னரோ ஐஇபிஎப்–க்கு மாற்றப்படும். 2011–12 நிதி ஆண்டு முதல் 2017–18 நிதி ஆண்டு வரை தொடர்ந்து 7 (ஏழு) ஆண்டுகளுக்கு கோரப்படாத/செலுத்தப்படாத டிவிடெண்ட் தற்போது கம்பெனி வசமுள்ளது.

ஐஇபிஎப் விதிகளின்படி, நிதி ஆண்டு 2011–12 மற்றும் நிதி ஆண்டு 2017–18 வரையிலான டிவிடெண்டை கோருவதற்கு சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு ஒரு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இது குறித்து அவர்கள் ஒரு கடிதத்தை கையொப்பமிட்டு கம்பெனியின் பங்கு பரிமாற்ற முகவர், இஐஎச் லிமிடெட் முதலீட்டாளர்கள் சேவைகள் பிரிவு, 7 ஷாம் நாத் மார்க், டெல்லி–100 054 அவர்களுக்கு 11 செப்டம்பர், 2019 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ வந்து சேரும்படி அனுப்ப வேண்டும். சம்பந்தப்பட்ட பங்குதாரர்கள் விவரம் மற்றும் ஐஇபிஎப்–க்கு மாற்றப்பட உள்ள கோரப்படாத சாதாரண சமபங்குகளை வைத்துள்ள சமபங்குதாரர்களின் விவரங்கள் ஆகியவை ''முதலீட்டாளர்கள் தொடர்புகள்'' கீழுள்ள கம்பெனியின் இணையதளம் www.eihassociatedhotels.inல் உள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள தேதிக்குள் அல்லது மத்திய அரசினால் அறிவிக்கப்பட்ட நீட்டிப்பு தேதிக்குள் செல்லத்தக்க கோரிக்கையை முதலீட்டாளர்கள் சேவைகள் பிரிவு பெறாதபட்சத்தில், ஐஇபிஎப் விதிகளின்படி, ஐஇபிஎப்–க்கு பங்குகளை மாற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்வதை தவிர கம்பெனிக்கு வேறு வழியில்லை.

ஐஇபிஎப் விதிகளின்படி, ஐஇபிஎப் சஸ்பென்ஸ் கணக்கிற்கு மாற்றுவதற்காக, பங்குதாரர்கள் வைத்துள்ள அசல் பங்கு சான்றிதழ்களுக்கு பதிலாக மாற்று பங்கு சான்றிதழ்களை கம்பெனி வழங்கும் என்பதை தாள் வடிவில் பங்குகளை வைத்துள்ள சம்பந்தப்பட்ட பங்குதாரர்கள் மற்றும் ஐஇபிஎப் சஸ்பென்ஸ் கணக்கிற்கு மாற்றப்பட உள்ள பங்குகளை வைத்துள்ள பங்குதாரர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். இவ்வாறு வழங்கப்படுவதால், அவர்களின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள அசல் பங்கு சான்றிதழ்கள் தானாகவே ரத்தாகிவிடும். எனவே வர்த்தகம் மேற்கொள்ள முடியாது. ஐஇபிஎப் விதிகளின்படி, ஐஇபிஎப் சஸ்பென்ஸ் கணக்கிற்கு மாற்றுவதற்காக, கம்பெனி மாற்று பங்கு சான்றிதழ்களை வழங்குவதற்கான போதுமான அறிவிப்பாக கம்பெனி அதன் இணையதளத்தில் படியேற்றம் செய்யப்படும் விவரங்கள் இருக்கும் என்பதை பங்குதாரர்கள் மேலும் கவனிக்க வேண்டும்.

ஐஇபிஎப்–க்கு பங்குகளை மாற்றப்பட்ட பின்னர், ஐஇபிஎப்–லிருந்து மட்டுமே பங்குதாரர்கள் பங்குகளை உரிமை கோர முடியும். அந்த பங்குகள் மீது உரிமை கோர, பங்குதாரர்கள் கீழ்க்கண்ட நடைமுறைகளை பின்பற்ற வேண்டும்.

ஏ) அவ்வப்போது மத்திய அரசினால் பரிந்துரைக்கப்படும் கட்டணத்துடன் இணைய தளம் www.iepf.gov.inல் உள்ள படிவம் ஐஇபிஎப்–5 மூலம் ஆன்லைனில் விண்ணப்பம் செய்ய வேண்டும்.

பி) உரிமை கோரிக்கையை சரி பார்ப்பதற்காக படிவம் ஐஇபிஎப்–5ல் குறிப்பிட்டுள்ள அனைத்து ஆவணங்களுடன் ஆன்லைன் விண்ணப்பத்தின் நகல் ஒன்றை கையொப்பமிட்டு கம்பெனிகள் பங்கு பரிமாற்ற முகவர், இஐஎச் லிமிடெட், முதலீட்டாளர்கள் சேவைகள் பிரிவு, 7 ஷாம் நாத் மார்க், டெல்லி–100 054 அவர்களுக்கு அனுப்ப வேண்டும்.

சி) உரிமை கோரிக்கை படிவம் பெற்ற 15 நாட்களுக்குள் கம்பெனி ஐஇபிஎப் ஆணையத்துக்கு உரிமை கோருபவரால் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து ஆவணங்களையும் சரிபார்ப்பு அறிக்கையுடன் இணைத்து அனுப்பும்.

டி) சரி பார்த்த பின், உரிமை கோரியவருக்கு பங்குகளை ஐஇபிஎப் ஆணையம் நேரடியாக விடுவிக்கும்.

இது குறித்து 3 ஜூன், 2019 தேதியிட்ட தனி அறிவிப்பினை கம்பெனியின் பதிவு அலுவலகத்தில் முகவரியினை பதிவு செய்துள்ள சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு கம்பெனி அனுப்பி உள்ளது. மேற்கண்ட விஷயத்தில் பங்குதாரர்களுக்கு சந்தேகம் ஏதேனும் இருப்பின் அது குறித்து கம்பெனிகள் பங்கு பரிமாற்ற முகவர், இஐஎச் லிமிடெட், முதலீட்டாளர்கள் சேவைகள் பிரிவு, 7 ஷாம் நாத் மார்க், டெல்லி–100 054 அல்லது இமெயில் முகவரி isdho@oberoigroup.com, invcom@tridenthotels.com அவர்களை அணுகலாம் அல்லது தொலைபேசி எண் 011–23890505ல் தொடர்பு கொள்ளலாம்.

EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்டுக்காக
இந்திராணி ரே
கம்பெனி செயலாளர்

இடம்: கொல்கத்தா
தேதி: 6 ஜூன் 2019